
# இராமானுஜர் வாழ்க்கை வரலாறு



## கதை தொகுப்பு

அடியேன்

கார்த்திகா சிவகுமார்



கூரத்தாழ்வானும், பெரியநம்பிகளும் சோழ மன்னன் முன்பு நின்றார்கள். சோழ அரசன் இராமானுஜரைப் பார்த்ததில்லை. அவன் கூரத்தாழ்வான் தான் இராமானுஜர் என்றுநினைத்தான். அவருடைய முகப்பொலிவு கண்டுவியந்துநின்றான்.

அரசனுடைய உளவாளி ஒருவன் - (கூரத்தாழ்வானிடம் அவருடைய சிஷ்யர் போல் நடித்து அரசனுக்கு உளவறிந்துகூறிய ஒருவன்) பெயர் நாலூரான்...

அவன் சோழ அரசனிடம் அவர் இராமானுஜர் அல்ல என்றும், கூரத்தாழ்வான் என்றும் கூறினான். அரசன் ஏட்டுச் சுவடியைக் கூரத்தாழ்வான் முன்பு எறிந்துகையெழுத்திடும்படி வற்ப த்தினான். அந்தச் ஏட்டுச்சுவடியில் "சிவத் பரம் நாஸ்தி -சிவனுக்குமேலான தெய்வமில்லை" என்றுஎழுதி கையெழுத்திடுமாறுசொன்னான்.

கூரத்தாழ்வான் அந்த ஏட்டுச் சுவடியை வாங்கி அதில், 'த்ரோணம் நாஸ்தி தத பரம்' என்று கையெழுத்திட்டார். த்ரோணம் நாஸ்தி தத பரம் - என்ற வாசகத்திற்கு 'சிவம் என்பதுஒர அளவு. சிவம் என்னளறவைக் காட் ம் பெரிய அளவுகள் உள்ளன' என்பதுஇந்த வாசகத்தின் அர்த்தம்.

கூரேசர் இவ்வாறுஎழுதிக் கையெழுத்திட்டதுஅரசனுக்குகோபத்தை உண்டாக்கியது. கூரேசருடைய கண்களைப் பிடுங்கும்படி ஆணையிட்டான்.

அரசருடைய காவலர்கள் தம்மைத் தாக்குவதற்குமுன்பே கூரத்தாழ்வான் தம்முடைய கண்களைப் பிடுங்கிக் கொண்டார். 'இப்படிப்பட்ட மதவெறி கொண்ட அரசனைக் கண்ட காரணத்திற்காகவே தம் கண்களைப் பிடுங்கி இருக்க வேண்டும்' என்று கூரத்தாழ்வான் கூறினார். அரசனுடைய காவலாளிகள் பெரிய நம்பியின் மீத பாய்ந்து அவருடைய கண்களையும் பறித்தார்கள்.

கூரத்தாழ்வானையும், பெரியநம்பியையும் சோழநாட்டுத் தலைநகரின் எல்லைப்புறத்திற்கு அவர்களுடைய சிஷ்யர்கள் அழைத்துச் சென்றார்கள்.

வயது முதிர்ந்த பெரியநம்பியினால் இந்த வேதனையை பொறுக்க முடியவில்லை. அவர் வழியிலேயே இவ்வுலக வாழ்வினை நீத்து, வைகுண்டத்திற்கு எழுந்தருளினார்.

கூரத்தாழ்வான் இத்தகைய துன்பத்திற்கு ஆளாகினாலும் மனம் தளரவில்லை. இன்னும் கூடிய சீக்கிரத்தில் நல்ல காலம் வரும் என்ற நம்பிக்கையுடன் இருந்தார்.

கூரேசர் திருவரங்கம் திரும்பியவுடன், அவரைக் கோவிலுக்குள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டார்கள். இராமானுஜரைத் தம் குருவாக கூரத்தாழ்வான் மதிப்பதை விட்டுவிட்டால் கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவார் என்று மன்னன் சார்பாக கூரத்தாழ்வானிடம் கூறப்பட்டது. இத்தகைய சூழலில் தான் அரங்கநாதப் பெருமாளைத் தரிசிப்பதை விட, அவரைத் தரிசிக்காமல் இருப்பதே மேல் என்று, இராமானுஜர் வரும் வரை ஸ்ரீரங்கத்து அரங்கநாதனை தரிசிப்பதில்லை என்றும  கொண்டார்.

அரசனின் டக்டளைக்கேற்ப அரசவைக்குக் கூரேசர் சென்றிருக்கிறார் என்னொனு அறிந்த இராமானுஜர், அவருடைய சிஷ்யர்ளகின் யோசனைக்கு இணங்க, சோழ நாட்டை விட்டுளெவியேறுவதென்றுதீர்மானித்தார்.

திருவரங்கத்தை விட்டுப் புறப்பட்ட இராமானுஜர் நீலகிரிக் காடுகளைச் சென் றடைந்தார். வைஷ்ணவ மதத்தைச் சேர்ந்த சில டேவர்களை அவர் அங்கு சந்தித்தார். அவர்களுடைய தலைவன் நல்லான் சக்கரவர்த்தி.

அவர் அந்தணர் குலத்தவர் என்றாலும், அனைவரும் இறைவனுடைய மக்களென்றுஉறுதி கொண்டார். ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த ஒருவரை அடக்கம் செய்தார் என்ற ஒரே காரணத்திற்காகச் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்டப்டார். இதைப்பற்றிக் கவலைப்டபாமல், இறைவனின் அன்பு மதத்தை டேவர்ளகிடம் அவர் பரப்பி வந்தார்.

இராமானுஜருக்கு நேர்ந்த துன்பத்தைக் டேக்ட டேவர்கள் மிகவும் வருந்தினார்கள். தங்க  ன் இருந்துவிடும் ப  ி இராமானுஜரை வேண்டினார்கள். ஆனால், இராமானுஜர் மைச  க்குச் செல்ல வேண்டும் என்றுதம் மனத்தில் தோன்றிய கருத்தை அவர்ளகிடம் தெரிவித்தார்.

டேவர்கள் அவருடைய பிரயாணத்திற்கு வேண்டிய செளகர்யங்களைச் செய்து கொடுத்தார்.

இராமானுஜர் மைசூர் ராஜ்ஜியத்தில் உள்ள தொண்டனூர் என்ற இடத்தைச் சென் றடைந்தார். தொண்டனூர் என்ற இடம் இப்பொழ  தொண்ணூர் என்று அழைக்கப்படுகிறது

அப்பொழுது ஹொய்சல வம்சத்தினர் மைசூரை ஆட்சி புரிந்து வந்தனர். அரசரின் பெயர் விட்டலதேவன். விட்டலதேவன் ஜைன மதத்தைச் சார்ந்தவன். தில்லியை ஆண்ட முஸ்லீம் மன்னனிடம் போர் புரிந்து உடற்குறையுற்றவன். துர்தேவதைகள் பிடித்துள்ளதாகக் கருதப்பட்ட ஒரு பெண் அவனுக்கு உண்டு.

விட்டல தேவனுக்குத் தம் மதத் தலைவர்களிடம் கோபம் ஏற்பட்டது. அவர்கள், அவனுக்கு உடற்குறை இருந்ததன் காரணமாக அவன் அளித்த விருந்தில் பங்கெடுத்துக்கொள்ள வர மறுத்தனர். அப்பொழுது மைசூர் வந்திருந்த இராமானுஜர் இதைக் கேள்விப்பட்டு, உடற்குறையை மதத்தோடு இணைத்து அரசனிடம் உதாசீனமாக நடந்து கொண்ட ஜைன மதத் தலைவர்களின் செய்கையை கண்டித்து, அரசனிடம் தம் கருத்தை எடுத்து வெளிப்படையாகக் கூறினார்.

உடற்குறைவின் காரணமாக மனிதனை இழிவாக நோக்கும் தன்மை வெறுக்கத்தக்கது என்ற இராமானுஜரின் கருத்தைக் கேட்டு மகிழ்ந்த அரசன், அவரைத் தன் மகளின் நோயைப் போக்கும் படி வே ண்டினான்.

இளமைப் பருவத்தில் காஞ்சிபுரத்தில் இத்தகைய நோயினைத் தீர்த்த இராமானுஜருக்கு இது புது அனுபவமாக இல்லை. அவர் முயற்சி வெற்றி கண்டது. அரசன் மகிழ்ந்து அவரை மைசூரிலேயே இருக்கும்படிக் கேட்டுக் கொண்டான். மன்னனும் ஸ்ரீவைஷ்ணவ மதத்திற்கு மாறினான். விஷ்ணு வர்த்தனராயன் என்ற பெயரும் அவனுக்கு ஏற்பட்டது.

மைசூரில் ஆயிரக்கணக்கான மக்கள் ஸ்ரீவைஷ்ணவ மதத்தைத் தழுவினர்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

பதிவு : 95 :-

✿🍁🌻 இராமானுஜர் மேல்க்கோட்டை திருநாராயணபுரம் செல்லுதல் :-

இராமானுஜர் மைசூரில் இருந்தபோது மேல்க்கோட்டை - திருநாராயணபுரம் சென்றார். ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயக் கதைகளில் திருநாராயணபுரம் என்றழைக்கப்படுகிறது.

இராமானுஜர் திருநாராயணபுரத்தில் ஸ்ரீமந்நாராயணனின் திருக்கோவில் மேல்க்கோட்டையில் இருப்பதை அறிந்தார். மகாவிஷ்ணுவைத் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மலைப்பகுதியில் நடந்தே சென்றார்.

திருநாராயணபுரத்தில் சுவாமியைத் தரிசிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கோவிலுக்குள் சென்றார். கோவில் சிதிலமடைந்து இருந்தது. மூலவரும் இல்லை. உற்சவரும் இல்லை. இயற்கை சீற்றங்களால் மண்ணிற்குள் புதைந்துவிட்டது போலும்.

மூலவர் இங்கே தான் இருக்கிறார் என்று நினைத்து, மூலவரின் விக்கிரகத்தையும் - உற்சவரின் விக்கிரகத்தையும் தேட ஆரம்பித்தார்.

காட்டுப் பகுதியில்விக்கிரங்களைத் தேடி அலையும் பொழுது, அங்கு ஏதும் தென்படாததால் மனம் வருந்தினார். கவலையுடன் இருக்கும் பொழுது, ஒரு துளசிச்

செடியின் மென்மையான மணம் உடம்பெங்கும் புலகாங்கிதத்தை உண்டாக்கியது.

இந்த மணம் எங்கிருந்து வருகிறது? துளசிச் செடி எங்கிருக்கிறது? என்பதைத் தேடி அலைந்தார். சுற்றும் முற்றும் பார்த்தார்.

ஒரு கரையான் புற்று இருந்தது. அதன் அருகில் சென்று பார்த்தபொழுது, ஒரு விஷ்ணு விக்கிரகம் புலப்பட்டது. இராமானுஜர் மனத்தில் மிகுந்த மகிழ்ச்சி கொண்டார்; சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார். அவர் தான் திருநாராயணபுரம் மேல்க்கோட்டையில் மூலவராக எழுந்தருளியிருக்கும் "திருநாராயணர்".

விட்டல தேவனின் உதவியுடன் அந்த இடத்தில் கோவில் நிர்மாணித்தார் இராமானுஜர். விஷ்ணு விக்கிரகம் கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

திருநாராயணபுரம் மூலவரைக் கண்டறிந்த இராமானுஜர், மூலவரைக் கண்டதும் அவர் அழகில் மயங்கி, அந்த விக்கிரகத்தை கோவிலின் கருவறையில் பிரதிஷ்டை செய்தார். மூலவரின் விக்கிரகத்தை கண்டுபிடித்தாயிற்று! உற்சவரை எங்கே என்று அங்குள்ள அனைவரிடம் விசாரித்தார். முஸ்லீம் அரசர்களின் தாக்குதலின் போது அதை எடுத்துச் சென்று விட்டார்கள் என்று அவ்வூரில் உள்ளோர் கூறினார்கள்.

ஒருவழியாக டில்லி மகாராஜாவின் அரண்மனையில், மகாராஜாவின் மகள் அந்தப்புரத்தில் உற்சவர் விக்கிரகம் இருக்கிறது என்றதும், இராமானுஜர் டில்லியை நோக்கி புறப்பட்டார்.

டில்லிக்குச் சென்றதும் அங்குள்ள முஸ்லீம் அரசர்களுடன் போராடி விக்கிரத்தை எடுத்துச் செல்ல உத்தரவு பெற்றுவிட்டார்.

முஸ்லீம் பாதுஷா அரசரின் மகள் அந்தரங்க அறையில் உற்சவரின் விக்கிரகத்தோடு விளையாடுவதும், கொஞ்சுவதும், உணவு ஊட்டுவதும் என அவரோடு பொழுதைப் போக்கி வந்தாள்.

இராமானுஜர் அவளிடம் இந்த விக்கிரத்தைக் கொடுக்கும் படி கேட்க, அவளோ இந்த பெருமாள் வந்தார் என்றால் "உங்களோடு கூட்டிச் செல்லுங்கள்" என்றாள். இல்லையென்றால் இங்கே விட்டு விடுங்கள் என்றாள்.

இராமானுஜரோ உற்சவரைப் பார்த்து "என் செல்லப்பிள்ளையே வாராய்! என்னோடு

வாராய்! என்று அழைத்தார்".

செல்லம் என்பதற்கு செல்வம் என்பதும் பொருள். இராமானுஜர் தன்னோட செல்லப்பிள்ளையைத் தான் இப்போது அழைக்கிறார். இராமானுஜர் அழைக்க,

விக்ரமான செல்வப்பிள்ளை குழந்தையாக மாறி கட்டிலிலிருந்து இறங்கி, கால்கொலுசு சலசலக்க மெதுவாக நடந்து நடந்து இராமானுஜரின் மடியில் வந்து சிலையாக மாறி அமர்ந்தது. இந்த அதிசயத்தைக் கண்ட அனைவரும் வாயடைத்து போனார்கள்.

ஆனால், அந்த விக்கிரகத்தை எடுத்து வரும் பொழுது, அவரிடம் இருந்து அந்த விக்கிரகத்தைக் கைப்பற்ற எதிரிகள் முயற்சித்தார்கள். தீண்டடத்தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்ட ஹரிஜன மக்கள் இராமானுஜருக்கு பெரும் துணையாக நின்று எதிரிகளின் முயற்சியைத் தோல்வியுறச் செய்தனர்.

இராமானுஜர் அவர்களுக்குத் தம் நன்றியைத் தெரிவிக்க, இந்தக் கோயிலில் ஹரிஜனப் பிரவேசத்திற்கு ஏற்பாடு செய்தார். Qஆகவே, தீண்டாமை ஒழிப்பு சட்டரீதியாக போன நூற்றாண்டில் தான், செயல்பட்டது என்றாலும், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஹரிஜனங்களுடைய ஆலயப் பிரவேசத்திற்கு வழி வகுத்தவர் இராமானுஜர் என்பது சரித்திரப்பூர்வமான உண்மை.

இராமானுஜர் செல்வப்பிள்ளையை அழைத்துக் கொண்டு திருநாராயணபுரத்தில் உற்சவராக பிரதிஷ்டை செய்து விட்டார். மூலவருக்கும், உற்சவருக்கும் சிறப்பாக பூஜைகள் செய்ய உத்தரவிட்டார்.

தொண்டனூரில் 'மோதி தலா' என்ற ஏரி இருக்கிறது. இராமானுஜர் இது உண்டாவதற்குக் காரணமாக இருந்தார். பக்கத்தில் இருக்கும் ஒரு ஆற்றிலிருந்து இந்த ஏரிக்கு நீர் கொண்டு வரும் யோசனையைத் தெரிவித்தவர் இராமானுஜர் என்று, ஹில்டன் ப்ரௌன் என்ற சரித்திர அறிஞர் கூறியுள்ளார்.

சோழ அரசனாகிய முதற்குலோத்துங்கன் இறந்துவிட்டான் என்ற செய்தி இராமானுஜருக்குக் கிடைத்தது. மீண்டும் திருவரங்கத்திற்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பம் இராமானுஜருக்கு உண்டானது.

இராமானுருக்கு தன்னுடைய புகுந்த வீடான "திருவரங்கத்திற்கு" செல்ல ஆசை வந்து விட்டது. என்னடா அவரோ ஆண்மகன், அதுவும் சந்நியாசி அவருக்கு ஏது புகுந்த வீடு என்று கேட்கிறீர்களா?.

இராமானுஜர் பிறந்ததோ "ஸ்ரீபெரும்புத்தூர்".
ஆனால், இராமானுஜர் அதிக காலம் வாழ்ந்தது திருவரங்கத்தில் தான். திருவரங்கம் உற்சவரின் திருநாமத்தில் ஒன்று "அழகிய மணவாள தாஸன்" என்பது. இராமானுஜரின் மனதை ஆள்கிறார் அல்லவா அழகிய மணவாள தாஸன். அதனால் தான் அப்படி சொல்னிறார் இராமானுஜர்.

✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿✿

**தொடரும். . .**